1982 மார்ச் 3]

ஆணையை வழங்க அரசு முயற்சித்து வருகிறது. மட்டக் குதிரை களுக்குப் பதிலாக கழுதைகள் வழங்கவேண்டும் என்று கூறியிருக் கிறார்கள். அவைகளையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதித்திராவிட பழங்குடி மக்கள் எங்கெங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டக் குதிரையை இலவசமாக வழங்குவது தவிர, வேறு என்னென்ன உதவிகளை அரசு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மட்டும் இன்றி, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து பழங்குடியினருக்கும் சிறப் பான வகையில் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு, பழங்குடியினர் துணைத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தீட்டி அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் ஏறக்குறைய 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் 2,896 லட்சத்தை செலவு செய்ய வேண்டும் என்ற உணர்வோடு பல்வேறு வகையிலான பணிகளை அரசுமேற் கொண்டு வருகிறது. அவர்கள் உயர்வடைவதற்காகவும், மற்ற அனைத்து வசதிகளை யும் பெறுவதற்காகவும், பல்வேறு திட்டங்கள் இந்தப் பழங்குடி யினர் துணைத் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் படும்.

மணப்பாறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 340—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையில் தொழில் பயிற்சி நிலையம் (Indus ri l Tr ining Ins i ut) அமைக்க திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத் திக்குழு (Developmen Council) பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலேயே அரியலூர் மற் றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில ஏற்கனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இருப்பதாலும் மணப்பாறையில் செயின்ட் ஜான் தொழிற்பள்ளி இருப்பதாலும் அரசின் நிதி நிலைமை காரணமாகவும் மணப்பாறையில் மற்றுமொரு தொழிற்பயிற்சி நிலையம் தற்போது ஏற்படுத்த இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினை.

(அ) கப்பல்கள் வாங்கும் திட்டம் நிதி நிலை அறிக்கையில் இடம் பெறாதது.

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினையை நான் கிளப்புகிறேன். தயவு செய்து, அருள்கூர்ந்து ஒரு கணம் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்வது ஒரு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படுகிற திட்டங்களை எடுத்துக் கொள்வதாகும். ஆனால் மிகப் பெரியதொரு திட்டத்தை, 100 கோடி ரூபாய் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நாவலர் அவர்கள் சுட்டிக் காட்டவில்லையென்பதுதான் நான் சொல்லப்போகிற ஒன்று. இன்று அரசாங்கம் பல்கேரியாவிலிருந்து மூன்று கப்பல்களை வாங்குவதாக அறிவித்திருந்தது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: இது பரபரப்பாக பத்திரிக்கைகளில் வந்திருக்கிறது. பல்கேரியா ஒப்பந்தம் தீர்ந்து போய் மேற்கு ஜெர்மனியிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மூன்று கப்பல்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைகளில் பல செய்திகள் வரும்.

திரு. துரைமுருகன்: ஒரு நூறு கோடி ரூபாய் திட்டத்தை பட்ஜெட்டில் காட்டவில்லை என்றால் அது ஒரு பட்ஜெட்டா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS